சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 279/2020

PW1 புஷ்பலதா 19.11.2025

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என கேட்டால் பஞ்சாயத்திடம் சொத்திற்கு வரியை மாற்றி கொடுக்க சொன்னேன். தாசில்தாரிடம் 1ம் பிரதிவாதி வாரிசாக அறிவிக்க கோரி கேட்டார் நான் கொடுக்க கூடாது என சொன்னேன். எனது பெரியப்பா எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாசில்தாரிடம் நான் தான் வாரிசு என்று 2ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 2ம் பிரதிவாதியிடம் கொடுக்கும் மனுவின் அடிப்படையில் சட்டபடி முடிவு காண வட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வீட்டிற்கு வரியை மாற்ற கோரி 3ம் பிரதிவாதியிடம் ஒரு மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அதற்கு 1ம் பிரதிவாதி மறுப்பு தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியால் சொத்தை பொறுத்து யாருக்கு உரிமை உள்ளது என்பதை பொறுத்து தீர்மானிக்க முடியவில்லை என்று கூறுகிறது. 2, 3 பிரதிவாதிக்கு எதிராக நான் வழக்கில் கோரியவாறு பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றம் முடிவு காண இயலாது என்றால் அது சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல, 2, 3

பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி